# INTERNATIONAL INDIAN SCHOOL DAMMAM

## GSS- ANNUAL PRACTICE PAPERS

## (2023-2024)

**CLASS: X** **SUBJECT: TAMIL**

## இயல்-1

**I. சான்று தருக:**

1. ஒற்றளபடை
2. செய்யுளிசை அளபெடை
3. இன்னிசை அளபெடை
4. சொல்லிசை அளபெடை
5. தனிமொழி
6. தொடர்மொழி
7. பொதுமொழி
8. தொழிற்பெயர்
9. எதிர்மறை தொழிற்பெயர்
10. முதனிலை திரிந்த தொழிற் பெயர்
11. வினையாலணையும் பெயர்

**II. இலக்கணக்குறிப்பு தருக:**

1. நல்ல படாஅ பறை
2. எடுப்பதூஉம்
3. உரனசைஇ
4. எங்ங்இறைவன்
5. படித்தான்
6. கண்ணன் வந்தான்
7. வேங்கை இதழ்
8. கொல்லாமை
9. தட்டு
10. சூடு

**III. நிரப்புக:**

1. அளபெடுத்தல் என்பது—-----------
2. சார்பெழுத்துக்கள் —--------எத்தனை வகைப்படும்.
3. உயிரளபெடை—---------- வகைப்படும்.
4. செய்யுளிசை அளபெடையினை—-------------என்றும் கூறுவர்.
5. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனி மொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது—---------- எனப்படும்.
6. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழில் பெயர் —-------- ஆகும்.
7. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது—------------- பெயர்.

**IV. கூறியவாறு செய்க:**

1. வருகை (வினையடியை எழுதுக.)
2. நடத்தல் (எதிர்மறை தொழிற்பெயர் மாற்றுக.)
3. சுடுதல் (முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஆக்குக.)
4. மணி (தொடர் மொழியாக மாற்றுக)
5. கெடுப்பதூஉம்(அளபெடையை நீக்கி எழுதுக)

**V. செய்யுள் வரிகளை படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை எழுதவும்.**

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

இன்னரும் பாப்பத்தே! எண் தொகையே !நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !

<u>வினாக்கள்:</u>

1. இச்செய்யுள் இடம் பெற்ற கவிதை தொகுதி எது?

   அ) பதிற்று பத்து ஆ) குறுந்தொகை இ) கனிச்சாறு ஈ) எட்டுத்தொகை

2. இப்பாடலின் ஆசிரியர் யார்?

   அ) பரஞ்சோதி முனிவர் ஆ) சாத்தனார்

   இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ) கீரந்தையார்

3. இப்பாடலில் தென்னன் என்ற சொல்லின் பொருள் யாது?

   அ) பாண்டியன் ஆ) கரிகால சோழன்

   இ) குலோத்துங்கச் சோழன் ஈ) சேரன்

4. இப்பாடல் கூறும் நூல்களில் ஒன்று ?

   அ) சீவக சிந்தாமணி ஆ) அகநானூறு

   இ) கலித்தொகை ஈ) சிலப்பதிகாரம்

**VI. விடை தருக:**

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
2. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
3. தாவரங்களின்பிஞ்சு வகை, குலைவகை குறித்துத் தேவநேயப்பாவாணர் கூறுவன யாவை?
4. தமிழ் சொல் வளமுடையது பொருள் வளமுடையது என்பதை தேவநேயப்பாவாணர் வழி விளக்குக.

# இயல்-2

**I.சான்று தருக:**

1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
5. உவமைத்தொகை
6. உம்மைத்தொகை
7. அன்மொழித்தொகை

**II. இலக்கணக்குறிப்பு தருக:**

1. நன்மொழி
2. வீசு தென்றல்
3. மாமரம்
4. முத்துப்பல்
5. அண்ணன் தம்பி

**III. நிரப்புக:**

1. சிறப்புப் பெயர், பொதுப்பெயர் ஆகியன வரும் தொகைச்சொல் ________ .
2. சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது________ எனப்படும்.
3. தொகைநிலைத் தொடர்____ வகைப்படும்.
4. உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது __________ எனப்படும்.
5. __________எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவு பெயர்களை தொடர்ந்து வரும்.
6. ஒரு தொடரில் வேற்றுமை உருபும் பயனும் மறைந்து வந்து பொருளை விளக்குவது________.
7. காலம் கரந்த பெயரெச்சம்________.
8. ஆன, ஆகிய உறுப்புகள் மறைந்து வருவது__________ தொகை.

**IV. கூறியவாறு செய்க:**

1. மதுரை சென்றார். (வேற்றுமை உருபு எடுத்து எழுதுக.)
2. தங்க கொலுசு அணிந்த பெண் வந்தாள். (அன்மொழித்தொகையாயாக மாற்றுக.)
3. தொண்டு (உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆக்குக)
4. தேன் போன்ற மொழி (உவமைத்தொகையாக்குக)
5. உற்றாரும் உறவினரும் (உம்மைத்தொகையாக்குக)

**V. செய்யுள் வரிகளை படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை எழுதவும்.**

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு

வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை

நீர் செல நிமிர்ந்த மாஅல் போல

பாடுஇமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு,

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?
   அ)பாரதியார் ஆ) நப்பூதனார் இ) சாத்தனார் ஈ)பாரதிதாசன்
2. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
   அ)காசிக்காண்டம் ஆ) காற்றே வா இ)முல்லைப்பாட்டு ஈ)மலைபடுகடாம்
3. நனந்தலை உலகம்- பொருள் தருக.
   அ)மழை ஆ) அகன்ற உலகம் இ) நற்சொல் ஈ)தோல்
4. இப்பாடல் எத்தனை அடிகளைக் கொண்டது?
   அ)103 ஆ) 100 இ) 99 ஈ) 200

**VI. விடை தருக:**

1. வசன கவிதை குறிப்பு வரைக.
2. விரிச்சி - சிறுகுறிப்பு எழுதுக.
3. காற்று மனிதனால் எவ்வாறு மாசுபடுகிறது?
4. தமிழ் இலக்கியத்தில் காற்றினை எங்கனம் புலவர்கள் வருணித்துள்ளனர்?
5. வாழையிலை விருந்து பற்றி எழுதுக.
6. காற்று வீசும் திசையைக் கொண்டு தமிழர்கள் காற்றிற்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளார்கள்?

## இயல்-3

**I.சான்று தருக:**

1. எழுவாய்த்தொடர்
2. விளித்தொடர்
3. வேற்றுமைத் தொடர்
4. வினையெச்சத் தொடர்
5. பெயரெச்சத் தொடர்
6. வினைமுற்றுத் தொடர்
7. இடைச்சொல் தொடர்
8. உரிச்சொல் தொடர்
9. அடுக்குத்தொடர்

**II. இலக்கணக்குறிப்பு தருக:**

1. கயல்விழி பார்த்தாள்
2. கபிலன் வந்தான்
3. ஒளியே வா
4. பாடசாலைக்குச் சென்றான்
5. ஓடிவா
6. பாடிய பறவை
7. பாடினாள் கண்ணகி
8. மற்றொன்று
9. சாலச் சிறந்தது

10. ஓடு ஓடு

III. நிரப்புக:

1. முற்றுப்பெறாத வினை பெயர்ச்சொல்லை தொடர்வது—------ எனப்படும்.
2. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது —-------- ஆகும்.
3. தொகாநிலைத் தொடர்கள் —-------- வகைப்படும்.
4. முற்றுப்பெறாத வினை, பெயர் சொல்லை தொடர்வது—-------- எனப்படும்.
5. வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு அமையும் தொடர்கள்—-------- தொடர்கள் ஆகும்.
6. இடைச்சொல்லுடன் பெயரும் வினையோ தொடர்வது___________ தொடராகும்.
7. தொகாநிலைத் தொடர் ______ வகைப்படும்.
8. ஒரு தொடரில் வேற்றுமை உருபு, சொல்லோ மறையாமல் வந்து பொருளை உணர்த்துவது_________.
9. செய்யுளுக்கு உரிமை பெற்று வருவது __________.

IV. கூறியவாறு செய்க:

1. பாய்ந்த புலி (வினைத்தொகை ஆக்குக)
2. பாடல் (கூட்டு நிலை பெயரெச்சமாக மாற்றுக)
3. பாடி மகிழ்ந்தனர் (எச்ச வினையை எடுத்து எழுதுக)
4. கண்ணகி (வினைமுற்றுத் தொடர் ஆக்குக)
5. காற்று வீசியது ( எழுவாய் எது)
6. வளவன் (விளித் தொடராக மாற்றுக.)

V. செய்யுள் வரிகளை படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை எழுதவும்.

அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்றுஎரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

   அ) பாரதியார் ஆ) நப்பூதனார் இ) பெருங்கௌசிகனார் ஈ) பாரதிதாசன்

2. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

   அ) காசிக்காண்டம் ஆ) காற்றே வா இ) முல்லைப்பாட்டு ஈ) மலைபடுகடாம்

3. அல்கி என்பதன் பொருள் என்ன?

   அ) தங்கி ஆ) அருமை இ) கூத்தர் ஈ) பள்ளம்

4. சிவந்த பூக்களை கொண்ட மரங்கள் எவை?

   அ) பனை ஆ)மூங்கில் இ) அசோக மரங்கள் ஈ) சந்தன மரங்கள்

**VI. விடை தருக:**

1. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் யாவை?
2. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தல் மலைபடுகடாம் பாடல் வழி விளக்குக.
3. பிறருக்கு உதவி செய்யாதவன் இயல்பு யாது?
4. வாழையிலை விருந்து பற்றி எழுதுக.
5. அறஉணர்வும் தமிழர் மரபும் குறித்து எழுதுக.
6. புறநானூறு காட்சிப்படுத்தும் விருந்தோம்பல் யாது?

## இயல்-4

**I.சான்று தருக:**

1. படர்க்கை வினை
2. திணை வழுவமைதி
3. பால் வழு
4. மரபு வழு
5. முன்னிலை வினை
6. இட வழுவமைதி
7. கால வழுவமைதி

**II. இலக்கணக்குறிப்பு தருக:**

1. என் அம்மை வந்தாள்
2. நான் வந்தான்
3. கத்தும் குயிலொசை
4. நேற்று வருவான்
5. ஆடவர்
6. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.
7. தென்னந்தோப்பு
8. கிளியாரே தூது செல்வீர்
9. கண்ணகி உண்டான்

**III. நிரப்புக:**

1. இலக்கண முறையுடன் பிழையின்றி பேசுவதும் எழுவதும்________ எனப்படும்.
2. இடம்_—-------- வகைப்படும்.
3. ‘கத்தும் குயில் ஓசை’ என்ற தொடர்________ ஆகும்.
4. பால் என்பது_______ உட்பிரிவு ஆகும்.
5. இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும் இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி பிழையென்று என ஏற்றுக்கொள்ளப்படுவது ________ஆகும்.
6. பால் ____________வகைப்படும்.
7. உயர்திணைக்குரிய பால்கள்________,______,________

**IV. கூறியவாறு செய்க:**

1. தென்னந்தோட்டம் (வழு நீக்குக)
2. புலவர் வந்தது ( வழாநிலையாக்குக).
3. பசுமாடு வந்தது (திணை வழுவமைதியாக்குக)

4. மயில் கூவும் (மரபுவழாநிலையாக்குக).
5. மாதவி வந்தான் (வழாநிலையாக்குக.)

**V. செய்யுள் வரிகளை படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை எழுதவும்.**

**விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**

**கரு வளர் வானத்து இசையில் தோன்றி,**

**உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;**

**உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்**

**வினாக்கள்:**

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

   அ) பாரதியார் ஆ) கீரந்தையார் இ) கௌசிகனார் ஈ) பாரதிதாசன்

2. பரிபாடல்____________ நூல்களுள் ஒன்றாகும்.

   அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) பதினெண்கீழ்க்கணக்கு
   ஈ) குறுந்தொகை

3. விசும்பு என்பதன் பொருள் என்ன?

   அ) வானம் ஆ) யுகம் இ) குளிர்ந்த மழை ஈ) சிறப்பு

4. ____________பரிபாடல் என்னும் புகழுடையது பரிபாடல் .

   அ) மங்கா ஆ) ஓங்கு இ) விரி ஈ) அழியா

**VI. விடை தருக:**

1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையென பரிபாடல் வழி அறிந்தவற்றை குறிப்பிடுக
2. செயற்கை நுண்ணறிவு முதன்மையானது -விவரி.
3. பெப்பர் குறிப்பு வரைக.
4. வேர்ட்ஸ்மித் என்றால் என்ன?
5. மின்னணுப் புரட்சிஎன்றால் என்ன?
6. செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள் யாவை?
7. “மாளாத காதல் நோயாளன் போல்” என்னும் தொடரில் உள்ள உவமை சுற்றும் செய்தியை விளக்குக.

## இயல்-5

**I.சான்று தருக:**

1. அறிவினா
2. ஏவல் வினா
3. மறைவிடை
4. உற்றது உரைத்தல் விடை
5. சுட்டுவிடை
6. கொடை வினா
7. இனமொழி விடை
8. ஐயவினா

**II. இலக்கணக்குறிப்பு தருக:**

1. தொலைவில் தோன்றுவது எருதோ? பசுவோ ?
2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.
3. ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா? என நூலகரியிடம் வினவுதல்.
4. திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.
5. செய்யுளை படித்தாயா? என வினவுவது.
6. இது செய்வாயா? என வினவிய போது செய்யேன் என்று மறுத்துக் கூறுவது.

**III. நிரப்புக:**

1. தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது —---------- வினா.
2. விடை —---------வகைப்படும்.
3. ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறி கிடக்கும் சொற்களை பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடு ஒன்று கூட்டி பொருள் கொள்வது—---------.
4. பொருள்கோள்—----- வகைப்படும்.
5. வினா________ வகைப்படும்.
6. தொடக்கம் முதல் முடிவு வரை நேராக பொருள் கொள்வது________.
7. சிதறி கிடக்கும் சொற்களை பொருளுக்கேற்றவாறு ஒன்றோடு ஒன்று கூட்டிப் பொருள் கொள்வது____________.

**IV. கூறியவாறு செய்க:**

1. என்னுடன் ஊருக்கு வருவாயா? (வினா எதிர் வினாதல் விடை தருக)
2. சொக்க வெள்ளி பாற்குடமோ? அமுத ஊற்றோ? (வினா வகையை எழுதுக)
3. படித்தாயா? ( இக் கேள்விக்கு உற்றது உரைத்தல் விடை எழுதுக)
4. விளையாடலாமா? (உருவது கூறல் விடை தருக)
5. திருக்குறள் புத்தகங்கள் இருக்கின்றன. (கொளல் வினாவாக்குக)

**V. செய்யுள் வரிகளை படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை எழுதவும்.**

பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி

விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்

புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ

**எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே.**

**<u>வினாக்கள்:</u>**

**1. இச்செய்யுள் இடம் பெற்ற நூல் எது?**

**அ) கம்பராமாயணம் ஆ) திருவிளையாடற் புராணம்**

**இ) பெரியபுராணம் ஈ) பரிபாடல்**

**2. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

**அ) பரஞ்சோதி முனிவர் ஆ) சாத்தனார் இ) குலசேகராழ்வார் ஈ) கீரந்தையார்**

**3. இப்பாடலில் மீனவன் என்ற சொல்லின்பொருள் யாது ?**

**அ) குலேச பாண்டியன் ஆ) கரிகால சோழன் இ) குலோத்துங்கச் சோழன்**

**ஈ) சேரன்**

**4. இந்நூல் எத்தனை காண்டங்களைக் கொண்டுள்ளது?**

**அ) 6 ஆ) 5 இ) 3 ஈ) 4**

**VI. விடை தருக:**

1. சதாவதானம் -குறிப்பு வரைக.
2. இடைக்காடனார் இறைவனிடம் யாது முறையிட்டார்?
3. மொழிபெயர்ப்பினால் தமிழ் மொழியில் ஏற்பட்ட பயன்கள் யாவை?
4. மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
5. பல்துறை வளர்ச்சியின் மொழிபெயர்ப்பின் பங்கு என்ன.
6. கல்வியை எவ்வாறு போற்றிக் கற்க வேண்டும் என செய்தி தம்பி பாவலர் கூறுகிறார்?
7. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்கு சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

## <u>இயல்-6</u>

**I.சான்று தருக:**

1. நெய்தல் நிலத்தின் பறை
2. பாலை நிலத்தின் பண்
3. நெய்தநில விலங்கு
4. மருத நிலத்தின் தொழில்
5. முல்லை நிலத்தின் மரம்
6. பாலை நிலத்திற்குரிய பண்
7. நெய்தல் நில மக்கள்
8. நெய்தல் நில சிறுபொழுது
9. குறிஞ்சி நிலப் பெரும்பொழுது

**II. இலக்கணக்குறிப்பு தருக:**

1. மாசி பங்குனி மாதத்திற்குரிய  பெரும்பொழுது
2. நெய்தல் நிலத்திற்குரிய சிறுபொழுது
3. மாயோன்
4. கொற்றவை
5. வைகறை

**III. நிரப்புக:**

1. பெரும்பொழுது—--------- கூறுகள்.
2. சிறுபொழுது—-------- கூறுகள்.
3. எற்பாடு என்றால்—-----
4. அன்புடை தலைவன் தலைவி  இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது—------
5. சுரமும் சுரம் சார்ந்த இடமும்—------
6. முல்லை நிலத்தின் பெரும் பொழுது—---------.
7. மருத நிலத்தின் பறை—---------
8. நெய்தல் நிலத்தின் ஊர்—------
9. குறிஞ்சி நிலத்தின் நீர்—-------

**IV.  கூறியவாறு செய்க:**

1. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை. (எந்த சிறு பொழுதின் கால நேரம்?)
2. இளவேனிற் காலம் ( பெரும்பொழுதின் மாதங்கள் எவை?)
3. வைகறை  (பொழுதை கூறுக)
4. ஞாழல்  (கருப்பொருள் கூறுக)
5. மருதம்,  நெய்தல் ( பெரும்பொழுதுகளை எழுதுக)

**V.  செய்யுள் வரிகளை படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை எழுதவும்.**

தா துகு சோலை தோறுஞ் சண்பக காடு தோறும்
போ தவிழ் பொய்கை தோ  றும் புதுமணற் றடங்க டோறும்
மா தவி வேலி பூக வனம்  தொறும் வயல்கள் டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே

1. கம்பர் ராமனது வரலாற்றை தமிழில் வழங்கி ____ என பெயரிட்டார்.
2. கம்பராமாயணம்________ காண்டங்களை உடையது.
3. கம்பர் _________ வள்ளலார் ஆதரிக்கப் பெற்றவர்.
4. கம்ப இசைத்த கவி எல்லாம் நான் என பெருமைப்பட்ட கவிஞர்_______.
5. கம்பன் வீட்டு கட்டுத்தறியும்____________  பாடும்.

**VI.  விடை தருக:**

1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன்  செங்கீரையாடிய நயத்தை விளக்குக.
2. தெருக்கூத்து என்பதை விளக்குக.
3. நிகழ்கலையின் சிறப்புகளைக்  கூறுக.

4. கரகாட்டம் விளக்குக.
5. தோற்பாவை கூத்து பற்றி விளக்குக.
6. பூத்தொடுக்கும் பெண்ணின் மனநிலையாக கவிஞர் உமா மகேஸ்வரியின் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

**VII. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக.**

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் __________

   உயிரினும் ஓம்பப் படும்.

2. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்

   ____________ முயற்சி தரும்

3. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் ___________

மெய்ப்பொருள் காண்ப ________.

4. முயற்சி __________ ஆக்கும் முயற்றின்மை

___________ புகுத்தி விடும் .

5. ஒழுக்கம் விழுப்பம் தரலான் __________

உயிரினும் ஓம்பப் படும்.

## படைப்பாற்றல்

**VIII. கடிதம் எழுதுக.**

1. உன் நண்பனுக்கு பாராட்டு கடிதம் எழுதுக.
2. நீ புதிதாய் சேர்ந்துள்ள பள்ளியின் நடப்புகளைப் பற்றி உன் தோழன்/ தோழிக்கு கடிதம் எழுதுக.
3. உனது அண்ணன் அனுப்பிய பிறந்த நாள் பரிசுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.
4. தேவையற்ற இரைச்சலைக் குறைக்கக் கோரி மாசுக்கட்டுப்பாட்டு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
5. உனக்குத் தேவையான புத்தகங்களை அனுப்பித் தருமாறு வணிகக் கடிதம் எழுதுக.
6. உனது பகுதியில் மின்சாரம் தடை படுவதைத் தடுக்கக் கோரி கடிதம் எழுதுக.
7. நீ வாழும் பகுதியில் உள்ள பூங்காவில் இலவச இணைய வசதி அமைத்து தருமாறு மாவட்ட ஆட்சியாளருக்கு கடிதம் எழுதுக.
8. பொது நூலகத்தை பயன்படுத்துவதால் விளையும் நன்மைகள் குறித்து அயலூர் நண்பனுக்கு கடிதம் எழுதுக.
9. உங்கள் பகுதியில் அரசு பள்ளி அமைக்க வேண்டி ஆட்சி தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.
10. உங்கள் ஊரில் மின்விளக்கு வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

## IX. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுதல்

1. முன்னுரை– முயற்சியின் சிறப்பு– முயற்சி திருவினையாக்கும்-- முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்– சிலந்தி முயற்சி கண்டு– முயற்சியால் முன் வந்தவர்கள் பலர்-- முயற்சி உடையார் வறுமை அடைவதில்லை- முடிவுரை

2. முன்னுரை- ஓரறிவு முதல் ஆறறிவு உயிர் வரை- உலகில் முதலில் தோன்றியவை- மரம் வளர்ப்போம்- அனைத்து உயிர்களுக்கும் தாயானவை மரங்கள்- பிற பயன்கள்- மரம் வளர்த்து மனித வளர்ப்போம்- முடிவுரை

3. முன்னுரை-– பொதுநலத் தொண்டு–சுயநலம்கூடாது– விசாலப் பார்வை– மாணாக்கர் பருவம்– சாரணர் படை- நாட்டுநலப்பணி குழு– விழிப்புணர்வு முகாம்– முடிவுரை

4. முன்னுரை -உணவு தரும் தொழில்- உழவர் உலகத்தார்க்கு ஆணி- இந்தியா கிராமங்களில் வாழ்கிறது- இன்றைய நிலை- விளைநிலங்கள் வீடு ஆகுதல்- வெள்ளமும் வரட்சியும்- நகரம் நோக்கி நகர்தல்- தீர்வு- முடிவுரை.

5. முன்னுரை– அறிவியலும் வாழ்க்கையும்– மனித வாழ்க்கைக்கு– நன்மை தீமை– அன்றைய எண்ணங்கள் இன்றைய வளர்ச்சி-மருத்துவத் துறையில் அறிவியலின் வளர்ச்சி– முடிவுரை

6. முன்னுரை– மொழி– தாய்மொழியின் தனித்துவம்– எளிதில் புரிதல் —தமிழின் இளமைத் தன்மை– தமிழின் சிறப்புகள்— தமிழ்ச் செம்மொழி— முடிவுரை.

7. முன்னுரை- சுற்றுச்சூழல் - நிலம், நீர் மாசுபடுதல்- காற்று மாசுபடுதல் - மாணவர்களின் பங்கு- முடிவுரை.

8. முன்னுரை- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்- வருமுன் காப்போம்- உணவே மருந்து- உடற்பயிற்சி- முடிவுரை.

## X. கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



